# முடிவுரை

இந்தியப் பண்பாட்டுச் சூழலில் கட்டமைக்கப்பட்ட நால்வருணக் கோட்பாடுகள், மக்களைப் பிரித்து பேதமையை வளர்ககவே வழிசெய்தது. இனம், மொழி, சாதி எனப் பல்வேறு நிலைகளில் பிரிந்து வாழும் மக்களின் வாழ்வியலில் அடித்தட்டு மக்களாகிய தலித்துகள் என்பவர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். வளிம்பு நிலை மக்கள் என அழைக்கப்படுவோரின் உரிமைகள் சாதியின் பெயரில் பரிக்கப்படுவதுடன் மறுக்கவும் படுகிறது. இந்த சாதியப்பாகுபாடு அவர்களைப் பொருளாதார மேம்பாடற்றச் சமூகக் குழுக்களாகளாகவே மாற்றியது. அரசியல், அதிகாரம், பொருளாதாரம் என்ற இம்முப்பிரிவுகளில் மேல்தட்டு மக்களின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. வேதங்கள், புராணங்கள், மரபுகள் எனப் பல்வேறு தளங்களில் மக்கள் தங்கள் வாழ்வினைச் செலுத்தி அடிமை முறையை உருவாக்கி "தீண்டப்படாதோர்" என்ற ஒரு தனித்த சமூதாயத்தை நிலைக்கச் செய்தனர். தீண்டப்படாதச் சமூதாயங்களாக இனம் காணப்படும் தலித் மக்களின் வாழ்வில் எவ்வித முன்னேற்றமும் இன்று வரையில் ஏற்படவில்லை. நவீனத்துவம் வாய்ந்தத் தற்கால வாழ்விலும் "சாதி" என்ற கொள்கை நிலைத்திருப்பதே இதற்கு காரணம் எனலாம்.

கீழ்சாதியினர், கீழ்தட்டு மக்கள், விளிம்பு நிலை மக்கள், தீண்டப்படாதோர் என்ற அடையாளங்களைத் தாங்கி வாழ்ந்து வரும் தலித்துகள் மேல்சாதிக்காரர்களின் கீழ், அடிமைகளாக, பண்ணை கூலிகளாக வாழும் அவலம் இன்று வரையில் தொடர்கிறது. இந்தியா விடுதலை பெற்று அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகியும், இந்தப் பிரிவினை வாத சக்திகளான சாதியம், படி நிலை முறையிலான வருணம் போன்றவற்றை ஒழிக்க முடியாதச் சூழலே நிலவி வருகிறது.

வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, கிராமப்புற, நகர்ப்புற தலித் மக்களின் நிலையோ இன்று சாக்கடையைத் தூய்மை செய்தல், மலம் அள்ளுதல், குப்பைகளை அள்ளுதல், போன்ற மனிதத் தன்மைக்குப் புறம்பான தொழில்களைச் செய்து வரும் நிலையிலேயே உள்ளனர். இவர்களுக்கான சமூக விடுதலை என்பதை இன்றளவிலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

இந்த சாதியத்தின் கட்டமைப்பைத் தகர்க்க யாரும் எங்கும் ஒரு போதும் குரல் எழுப்பவில்லை என்பதே இந்தியாவின் வரலாறாகவுள்ளது.

ஐரோப்பியரின் வருகையினால் மக்களின் வாழ்வில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தாலும் சாதியப்பாகுபாடு நிலையை மட்டும் ஒழிக்க முடியவில்லை. பிறப்பின் அடிப்படையில் மக்களை மேல், கீழ் எனப் பிரித்துப்பார்க்கும் அவலம் இன்றும் உள்ளது. இந்தச் சாதியப் போக்குகளில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் தலித் மக்களே ஆவர். பார்ப்பனர், சத்திரியர், வைசியர் என்ற மூன்று படிநிலைகளில் உள்ள மக்கள் அனைவரும் மேல்ச்சாதி, கீழ்ச்சாதி என்ற நிலைகளைக் கடைப்பிடித்தலில் ஒற்றுமையாகவே உள்ளனர். அன்று முதல் இன்று வரையில் தலித் மக்களுக்கான வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஆதிக்கச்சக்தியினரேப் பெருந்தடையாக இருக்கின்றனர். மேலைநாட்டினரின் வருகையினால் ஏற்பட்ட மாற்றங்களில் இலக்கிய மாற்றங்களும் நடந்தது. சிறுகதை, கவிதை, புதினம் போன்ற புதிய வகை இலக்கியங்கள் ஒடுக்கப்பட்டோருக்கானச் சார்புக் கொள்கைகளாக உரிமைக் குரல் கொடுத்தது. இவ்வாறு எழுந்த ஆதரவுக்குரல்கள் ஆங்காங்கே தோன்றியும் மறைந்தும் போனது. பொதுவுடைமைச் சித்தாந்தம் பேசும் மார்க்சியம், தொழிலாளர் என்ற பிரிவினருக்குச் சாதகமாக குரல் கொடுத்தது, சாதியத்திற்கு எதிராகவும் நின்று போராடி தோற்றுள்ளது. பெரியாரின் சமத்துவச் சிந்தனைகள், அம்பேத்காரின் உரிமைப் போராட்டங்கள் சமூக மாற்றங்களுக்கான விதைகளாக அமைந்தது. பெரியாரும், அம்பேத்காரும் இல்லையென்றால் தலித் மக்களின் வாழ்வு இருள் படிந்ததாகவே இருந்திருக்கும். இப்பொழுதும் அப்படித்தான் உள்ளது.

தமிழகத்திலும் சாதியப் போக்குகளை ஆதரித்துப் போற்றிய பண்டை அரசு மரபுகளும், மத்தியக்கால பண்ணை முதலாளிகளும், விவசாய நிலவுடமையாளர்களும் அடித்தட்டு மக்களின் உழைப்பை சுரண்டி, கரிசனம் இல்லாமல் தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொண்டனர். அடித்தட்டு மக்களாகிய தலித் மக்களுக்கான ஆதரவுக் குரலினை எந்த ஒரு சமூகமோ தனி மனிதனோ கடந்த நூற்றாண்டு வரையில் கொடுத்ததில்லை. சாதி பார்ப்பது தவறு என்றோ, சாதியே மக்களை ஒன்றபடாமல் வேறுபடுத்துகிறது, ஆதலால் சாதியப் போக்கு இனி வேண்டாம் என்ற நிலைப்பாட்டினையோ எந்தவொரு சமூகமோ, அரசோ, கூறியதைக் காணமுடியவில்லை. இந்தச் சாதியப் போக்கினை வெளிப்படையாக கண்டிக்கும் தலைவர்கள் ஒருசிலரே இருந்தனர்.

ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிமைகளை மறுப்பதும், இதைப்பற்றி பேசுவதும் தவறு என்கிற சமூகச் சூழல் இன்று வளர்ந்து வருகிறது. நவீனத்துவ இலக்கியங்கள் தலித் மக்களின் வாழ்வியலின் அவலங்கள் எடுத்துரைக்கிறது. இந்தியச் சமயங்கள் நிறுவனத் தன்மைக்கு மாறியிருந்தாலும் சாதி மட்டும் அதுவாகவே உள்ளது. தலித் மக்களைப் பற்றிப் பேசுதல், எழுதுதல் என்ற ஒரு நிலையைச் சில படைப்பாளர்கள் பின்பற்றினாலும், தலித் மக்களைப் பற்றி "தலித்" மக்களே எழுதும் தற்கால நிலையாக எழுத்துலகம் முன்னேற்றம் கண்டுள்ளது.

ஒடுக்கப்பட்டோர்களுக்கு, தாழ்த்தப்பட்டோர்களுக்குச் சார்பாக குரல் கொடுக்கும் எழுத்தாளர்கள் தோன்றி, தலித் மக்களின் வாழ்வியலை தங்களின் படைப்புகளின் வழியேச் சொல்லும் நவீனப் போக்கு இன்று வளர்ந்து வருகிறது. இவ்வகையானப் போக்கில் தாழ்த்தப்பட்டோருக்கான உரிமைக் குரல் கொடுக்கும் இலக்கியங்களைப் படைத்து வரும் நவீன எழுத்தாளர்களில் "இமையம்" என்ற படைப்பாளர் ஒரு தனித்த இடத்தைப் பெற்றுள்ளார்.

தலித் மக்களின் வாழ்வியல் சூழலையே தன் படைப்பிற்குரிய பொருண்மையாக மாற்றி, சிறுகதைகள், புதினங்கள் எனப் படைத்துவரும் இமையம் என்ற படைப்பாளர், ஏன்? தலித்துகளை தன் படைப்பின் முதன்மை மாந்தர்களாக்க வேண்டும் என்ற கேள்வியோடும், இவரின் படைப்புகள் தலித்துகளின் வாழ்வினை சரியான முறையில் பதிவு செய்துள்ளதா என்பதினை பொருண்மையாகக் கொண்டு "இமையம் படைப்புகளில் விளிம்பு நிலை மக்களின் பதிவுகள்" என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வினை ஐந்து அலகுகளாகப் பிரித்து இமையம் படைப்புகள் ஆய்வுப்பொருளாக மாற்றப்பட்டு பல்வேறு சான்றுகளுடன் , பல்வேறு கருத்துக்களுடன் ஆய்வின் கருத்தாக்கங்கள் இந்த ஆய்வேட்டில் சொல்லப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாகுபாடுகளில் சிக்கித் தவிக்கும் ஒடுக்கப்பட்டச் சமூதாயமான விளிம்ப நிலை தலித்துகளை இமையம் படைப்புகள் பேசுவதால், இந்தப் படைப்புகள் உரிய அணுகமுறையில் அணுகி விளிம்பு நிலை தலித்துகளுக்கான விடுதலைத் தீர்வுகளை இதன் மூலம் கண்டுள்ளது.

இதுவரை தமிழ் இலக்கியங்களில் பேசப்படாத மக்களாவே தலித்துகள் இருந்துள்ளனர். படைப்பாக்கக் களமும் மேல்தட்டு மக்களின் கைவசம் இருந்ததினால் கடந்த நூற்றாண்டு வரையில் இலக்கியங்களும் மேல்த்தட்டு வருணத்தார்களுக்கு உகுந்ததாகவே படைக்கப்பட்டு வந்தது. இந்தச் சூழல்

இன்று மாறி இலக்கியங்களில் பேசும் மாந்தர்களாக தலித் மக்கள் காணப்படுகின்றனர். இது நவீனத்துவ இலக்கியங்களின் வெற்றி எனலாம்.

அந்த வகையில் "இமையம்" படைப்பாளர், தன் படைப்புகளின் வழியே தலித்துகளின் வாழ்க்கையை முதன்மைப் படுத்தியிருப்பது, எழுத்தாளரின் சமத்துவ எண்ணத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இருப்பினும் படைப்பாளரின், நோக்கம் அதுவாக இல்லை. மாறாக தலித் மக்களின் சமூகச் சூழலின் இழிந்த நிலையினை எடுத்துரைப்பதாக அமைந்து விட்டதை இந்த ஆய்வு பதிவு செய்துள்ளது. "இமையம் படைப்புகளில் விளிம்பு நிலை மக்களின் பதிவுகள்" என்ற தலைப்பில் அமைந்த இந்த ஆய்வானது "இமையம்" படைத்த சிறுகதைகள், புதினங்கள் ஆகிவற்றை முதன்மை இலக்கியங்களாகக் கொண்டு துணை பல்வேறு நிலைகளில் ஆய்வினை நிகழ்த்தியுள்ளது.

இயல் ஒன்று "வரலாற்று நோக்கில் விளிம்பு நிலை படைப்புகள்" என்ற தலைப்பில், விளிம்பு நிலை படைப்புகள் என்றால் என்ன? என்ற கேள்வியைத் தொடுத்து அதற்கான விடையாக விளிம்பு நிலை படைப்புகள் என்பது தலித்திலக்கியங்களே என வரையறை செய்து உதாரணங்களின் வாயிலாகச் சொல்லப்பட்டுள்ளது. வரலாற்றுப் பின்புலம் என்பது அனைத்து இலக்கியங்களுக்கும் உண்டு என்பதினை அடிப்படையாக வைத்து விளிம்பு நிலைப் படைப்புகள் எந்த மாதிரியான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது என்பது இதனுள் ஆய்ந்து கூறப்பட்டுள்ளது. இதுவரையில் இலக்கியங்களில் முதன்மைப் பாத்திரங்களாகப் பேசப்படாத மக்களானத் தலித்துகளைத் தற்காலப் படைப்புகளில் பேசுவதற்குக் காரணங்கள் ஆராய்ந்து சொல்லப்பட்டுள்ளது. "தலித் இலக்கியங்கள்" தோன்றக் காரணங்களும், இதனைப் படைத்த இலக்கியவியலாளர்களின் ஆர்வமும் ஆராயப்பட்டு சான்றுகளுடன் நிருபிக்கப்பட்டுள்ளது. இவ்வியலின் முடிவாக, தலித் என்றால் என்ன? என்பதற்கான விடையைப் பல்வேறு அறிஞர்கள் கூறியக் கருத்துக்களுடன் ஒப்பிட்டு விளிம்பு நிலையில் உள்ளவர்களும் தலித் மக்களும் ஒன்றுதான் என முடிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

இயல் இரண்டில், "இமையம் படைப்புகள் ஒரு சமூகவியல்பார்வை" என்ற தலைப்பின் கீழ், இமையம் படைப்புகளான சிறுகதைகள், புதினங்கள் இவையிவையெனை தனித்தனியே எடுத்துரைத்து விளக்கப்பட்டுள்ளது. இமையத்தின் "கோவேறு கழுதைகள்" "ஆறுமுகம்" "செடல்" போன்ற புதினங்களின், முன்கதைச் சுருக்கம் கூறப்பட்டு சமூகவியல் பார்வையுடன்

அணுகப்பட்டுள்ளது. தலித் மக்களின் வாழ்க்கை இப்புதினங்களில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை சமூகியல் நோக்கில் ஆய்ந்து சான்றுகளுடன் சொல்லப்பட்டுள்ளது. இவ்வியலின் முடிவாக, படைப்பாளர் தன் படைப்பிற்குரிய கதை மாந்தர்களாக தலித் மக்களை ஏன் படைத்துக்காட்டவேண்டும் என்பதாகவும் , சிறுகதை மற்றும் புதினங்களில் காணப்பட்டுள்ள தலித் மக்கள் சார்ந்த சமூகவியல் சார்ந்த வாழ்க்கைப் பதிவுகள் இதன் மூலம் சொல்லப்பட்டுள்ளது.

"கோவேறு கழுதைகள்" என்ற புதினத்தில் வாழ்க்கைச் சூழலில் சிக்கித் தவிக்கும் புதிரை வண்ணார் என்ற சமூகத்தின் அவலநிலைகளை இந்த தமிழ்ச் சமூகம் அறிந்துகொள்வதற்காக இச்சமூகத்தார் அடையும் துன்பங்கள், சிக்கல்கள் போன்றவற்றை ஆய்ந்து சொல்லப்பட்டுள்ளது.

"ஆறுமுகம்" என்ற புதினமானது, கிராமப்புறத்திலிருந்து நகர்ப்பறத்திற்கு குடியேறும் தலித் மக்களின் வாழ்வியலின் சிதைவை முன்னுருத்திக் கூறப்பட்டுள்ளது. பெண்கள் நகர்ப்புற மாற்றத்திற்காகத் தங்களின் கற்பை விலையாகத் தந்து பலியாகும் நிலையில் "விலை மாதர்களாக" மாறும் தன்மை சமூகவியல பார்வையோடு ஆய்ந்து சொல்லப்பட்டுள்ளது.

"செடல்" என்ற புதினம் மூன்று தொகுதிகளாக உள்ளது. "செடல்" என்ற புதினம் பழைய மரபுகளில் சிக்கித் தவிக்கும் தலித் பெண்களை மையப்படுத்தியுள்ளது. இந்தியப் புராணங்களிலும்,மரபுகளிலும் காணப்படும் "தேவதாசி முறை" "பொட்டுக்கட்டுதல்" எனவும் அழைக்கப்படுகிறது. இந்த பழைய மரபினைக் கொண்டு இயங்கும் மேல்த்தட்டு சமூகத்தின் மூட நம்பிக்கைகள் "தலித்" மக்களை எவ்விதத்தில் பாதிக்கிறது என்பதைக் கதைக் கதைக் கருவாகக் கூறியுள்ளது. தலித் குடும்பங்கள், சிக்கிச்சின்னாபின்னமாகும் அவலத்தின் முடிவு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று, இமையத்தின் சிறுகதைப் படைப்புகளான "மண்பாரம்" வீடியோ மாரியம்மன்" "கொலைச் சேவல்" போன்ற சிறுகதைத் தொகுப்புகளில் உள்ள சிறுகதைகள் சுருக்கமாகக் கூறப்பட்டு, கதை மாந்தர்களின் இயக்கம் தலித் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை சமூகவியல் பார்வையோடு ஆராயப்பட்டுள்ளது.

இயல் மூன்றில் "தலித் மக்களான விளிம்பு நிலை மக்கள்-அவர்களது தொழில் சார்ந்த சிக்கல்களை மையப்படுத்தி தலித் மக்களின் வாழ்வியல் சூழல்

தகுந்த இலக்கியக் கொள்கைகளோடு அணுகி இமையத்தின் படைப்புகளின் நோக்கம் என்ன என்பது இதனுள் நிரூபிக்கப்பட்டுள்ளது. புதினங்களில் கூறப்பட்டுள்ள கதாப்பாத்திரங்களின் தொழில்களை எடுத்துக் கூறி அவற்றின் வழியே தலித்துகளின் தொழில் முறையிலான சிக்கல்கள் முறையான ஆதாரங்களின் துணைகொண்டு ஆராயப்பட்டுள்ளது. பாலியல் தரகுத் தொழில், பாலியல் தொழில், பண்ணைக் கூலித் தொழில், பூவிறகும் தொழில், ரிக்ஷா ஓட்டும் தொழில், சாலையோரக் கடை, வீட்டு வேலைக்குச் செல்லும் தொழில், கூத்து கட்டும் தொழில், விழாக்களில் நாடகம் நடத்தம் தொழில், அழுக்குத்துணி வெளுத்தல், விவசாயப் பண்ணைத் தொழில் போன்ற தொழில்களை விளிம்பு நிலை மக்களானத் தலித்துகள் செய்து வருவதாக இமையம் படைப்புகளில் சொல்லப்பட்டுள்ளது. அழுக்குப்படிந்தத் தொழில்களை தலித் மக்கள் செய்வதற்கான சூழல் ஆராயப்பட்டு இத்தொழிலின் மூலம் அவர்கள் அடையும் துன்பங்கள், சிரமங்கள், போன்றவற்றையும் அத்தொழில்கள் மேற்கொள்ளும் போது ஏற்படும் சிக்கல்கள் போன்றவைகளும் சான்றுகளுடன் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

இயல் நான்கில், விளிம்பு நிலை மக்களில் பெரும்பான்மையாக இருப்போர் தலித்துகளே. ஆதலால், படைப்பாளர் "இமையம்" ஏன்? தலித்துகளின் வாழ்வினைத் தன் படைப்புக்குரியப் பொருளாக மாற்றவேண்டும் என்ற கேள்விக்கு விடைதேடும் விதமாக, இனம், மதம், சாதி சார்ந்த படைப்பாளரின் அரசியல் பின்புலம் இதில் கூறப்பட்டுள்ளது. படைப்புகளுக்கெதிரான விமர்சனங்களையும் துணையாகக் கொண்டு "இமையத்தின் அரசியலும் படைப்பாக்க மன நிலையும்" என்ற தலைப்பில் இமையத்தின் சாதி அரசியல் இவ்வியலில் ஆராயப்பட்டு , இமையத்தின் படைப்புகள் தலித் மக்களைச் சார்ந்ததாக இருந்தாலும், படைப்பாளரின் மேல்ச்சாதியின் போக்கை இப்படைப்புகளின் வழியே தெரிவதை அவரின் படைப்புக்களின் மூலம் உண்மை நிலைகளாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இயல் ஐந்தில், ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கானத் தீர்வுகளாக இமையம், தன் படைப்புகளில் எதனை முன்னிருத்துகிறார்கள் என்பதை ஆராய முற்படும் போது, இமையம் தன் படைப்புகளில் தலித் மக்களுக்கோ, அவரின் வாழ்வியலுக்கோ, தலித்துகளின் சமூக விடுதலைக்கோ அல்லது தலித் மக்களின் தொழில் முறையிலான வாழ்விற்கோ எவ்விதத் தீர்வுகளையும் தன் படைப்புகளின் வழியே சொல்ல வில்லை என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. அவரின்

சிறுகதைகள், புதினங்களின் வாயிலாக விடுதலைக்கானத் தீர்வுகள் எடுத்துரைக்கப்படவில்லை என்ற கருத்து இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளையில் தலித் மக்களை தன் படைப்பிற்குரிய கதாநாயகர்களாக்கிய இமையம் என்ற படைப்பாளரின் முயற்சிகள் பாராட்டப்பட்டுள்ளது. சாதிய அடக்குமுறைகளிலிருந்து மீள்வதற்கான சிந்தனைகள் இவரின் படைப்புகளில் அமைந்துள்ளதாக கதை நிகழ்வுகளைக் கொண்டு சொல்லப்பட்டுள்ளது.

ஆய்வின் முடிவாக ஒடுக்கப்பட்டோர், அடித்தட்டு மக்கள், விளிம்பு நிலை மக்கள், தாழ்த்தப்பட்டோர், தீண்டப்படாதோர், கீழ்ச்சாதியினர், இழிந்தோர்கள் எனப் பல்வேறு பெயர்களில் இனம் காணப்படும் மக்களை "தலித்" என அழைக்கவேண்டும் என்ற சிந்தனை இவ்வாயின் முடிவாகக் கூறலாம்.

விளிம்பு நிலை மக்களான தலித் மக்களின் தொடர்பானப் படைப்புகள் வருங்காலத்தில் எவ்வகையில் அமைய வேண்டும் என்பதும், இம்மாதிரியானப் படைப்புகள் மேலும் பல ஆய்வுக் களங்களை உருவாக்க துணை நிற்கும் என்பதினையும் தொகுத்து ஆய்வின் முடிவாகத் தரப்படுகிறது.

1. விளிம்பு நிலை மக்களின் வாழ்விற்கு துணைநிற்கும் சமூக ஆர்வலர்களின் சார்புக் கொள்கைகளையும், அவரது வாழ்வியலையும் சிறுகதைகளாக, புதினங்களாக படைக்கும் போது, மக்களின் சாதியைப் பற்றிய வாழ்வியல் சிந்தனைகள் மாறுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும்.
2. தலித் மக்களை, படைப்புக்குரிய மாந்தர்களாக கூறும்போது அவர்களது இழிந்த நிலையை எடுத்துக் கொள்ளாமல், தலித் மக்கள் இன்று எத்தனையோ துறைகளில் பலவிதமான முன்னேற்றங்களைப் பெற்று மேல்தட்டு மக்களின் வாழ்விற்கு இணையாக, மேலான வாழ்வினை ஏற்றமாகப் பெற்றுள்ள நிலையைக் கதைகளாக்கிக் கூறினால், தலித் மக்களைப் பற்றிய எதிர் மாறான கருத்துகள் மாறுவதற்கு வாய்ப்பாக அமையும்.
3. தலித் மக்களின் கீழ்நிலையை அகற்ற, அல்லது சாதிய முறைகளின் கீழ்,மேல் என்ற நிலை மாறக் கலப்புத் திருமணங்கள், சீர்திருத்தத் திருமணங்கள் போன்றவற்றை பெரியாரின் வழி நின்று இலக்கியங்களில் கூறலாம்.

4. பெண்ணியம் சார்ந்த நிலையில், பெண்களுக்கான கருத்து உரிமையும், வாழ்வுரிமையையும் பெற்றுத் தரும் வகையில் படைப்புகள் அமைந்தால் அது பெண்களின் முன்னேற்றத்திற்குத் துணைநிற்பதோடு, பெண்களின் முன்னேற்றம் என்பது சாதீயப்பாகுகளை அகற்றும் ஒரு மருந்தாக உள்ளது என்பதை இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.
5. தலித் மக்களின் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள், தலித் மக்களின் கலாச்சாரம், பண்பாடு போன்றவைகளைச் சிதைக்காமல் உரிய களம் அமைத்து ஆராய இந்த ஆய்வு துணை செய்யும்.
6. விளிம்பு நிலையில் நின்று இயங்கிக் கொண்டிருக்கும் தலித் மக்களுக்கான வழிகாட்டியாக இவ்வாய்வு அமைவதோடு, தலித் மக்களை ஆய்வு செய்வோருக்கானப் பலப் புதிய களங்களையும் அமைத்துத் தரும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.
7. நாடோடிகளாக இருக்கும் அலை குடியினர், நிலைத்தத் தன்மைக்கு ஒரு நேர்க்கோட்டில் தங்கள் சமூகத்தை கட்டமைக்கச் சிந்தனை வழியில்இவ்வாய்வு துணையாக நிற்கும்.
8. இமையம் படைப்புகளின் வழியே, தலித்துகள் இனவிடுதலைக்கானப் போராட்டங்கள் ஒற்றுமை எனச் சொல்லப்பட்டுள்ளது. தலித் மக்களின் உயர்வை வெளிப்படுத்த அவர்களின் பாரம்பரிய கலை சார்ந்த பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு படைப்புகள் படைக்க படைப்பாளர்களுக்கு பரிந்தரைசெய்கிறது.
9. இமையம் படைப்புகள் தலித் எனப் பொதுத் தன்மையில் நின்று தலித் மக்களுக்கானப் புதிய அடைமயாளச் சொல்லாக "விளிம்பு நிலை மக்கள்" என்ற சொல் பயன்படுத்த இந்த ஆய்வு முயற்சிக்கிறது. இ விளிம்பு நிலை என்ற சொல்லாடல் ஒரு தனித்த ஒரு தலித் சமூகத்தை மட்டும் குறிக்கும் சொல்லல்ல. விளிம்பு என்பது கல்வி, பொருளாதாரத்தில் கடைநிலையில் நின்று பயணிக்கும் எந்தவொரு சாதியைக் குறிக்கும் சொல்லாக இருக்கிறது என முடிவாகக் கூறுகிறது. ஆதலால், சமூகத்தில் மிகவும் பின்தங்கியுள்ள எந்தவொரு சமூகத்திற்கும் விளிம்பு நிலை என்ற சொல் பொருந்தும் என்பதால், தலித் என்ற தனித்த அடையாளத்துடனோ! அடித்தட்டு மக்கள் என்ற தனித்தப் பிரிவாகவோ , கீழானவர்கள் என்றோ தலித்துகளை இனி அழைக்கத் தேவையில்லை என்பதை இவ்வாய்வு வலியுறுத்துவதால் "விளிம்பு நிலை மக்கள்" என்ற புதிய சொல்லாடல்

சாதியத்தை புறம் தள்ள துணை நிற்கிறது என இவ்வாய்வு துணிந்துரைக்கிறது.

10. தலித்துகளின் பாரம்பரிய கலைத் திறனை அறிந்து கொள்ளவும், தலித் மக்களிடையே பொதிந்துள்ள அறிவுப்பூர்வமானச் சிந்தனைகளையும் புதுமைக் கருத்துகளையும் இமையம் படைப்புகள் கூறப்படாமல் இருப்பதால் வருங்காலத்தில் மேற்கூறப்பட்ட சிந்தனைகளுடன் தோன்றியுள்ள படைப்புகளை ஆய்வுக்கானப் பொருளாகக் கொண்டால் பலப்புதிய ஆய்வுக் களங்கள் அமைய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதுடன் தலித் மக்களைப் பற்றிய தவறானக் கருத்துக்களும் மாறுவதற்கு வாய்ப்பாக அமையும் என அறிவுறுத்துகிறது.
11. தலித் மக்களைப் பற்றிய ஆய்வுகளில் இந்த ஆய்வு தமிழ் இலக்கியவுலகில் சிறப்பான இடத்தைப் பெறும்.
12. குடும்பம், வாழ்வியல் முறை, விழுமியங்கள் என்பவை தலித் மக்களைச் சார்ந்தும் உள்ளது என்பதை இவ்வாய்வு நிரூபித்துள்ளதால் முதுகலை, ஆய்வுகள்,ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகள், முனைவர் பட்டங்களுக்கான ஆய்வுகள் போன்ற ஆய்வுகளுக்கு ஒரு முன்னோடியாக இவ்வாய்வு திகழும்.

தலித் மக்களை முதன்மைப் பாத்திரங்களாகக் கொண்ட இலக்கியங்களின் பொருண்மையை ஆராய்ந்திருப்பதால் தலித் மக்களின் தொடர்பான எல்லாவிதமான ஆய்விற்கும், தலித் இலக்கியம் சார்ந்த ஆய்விற்கும் இவ்வாய்வேடு ஒரு முதன்மை ஆதாரமாகவும் துணைமை ஆதாரமாகவும் துணை நிற்கும்.